[22nd November 1963

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. செ. மாதவன் : அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு செர்விஸ் புக்ஸ் சப்ளை செய்யாத காரணத்தால்தான் இந்தக் கால தாமதம் ஏற்பட்டது என்பது உண்மையா? உடனடியாக, பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் எல்லா அலுவலர்களுக்கும் செர்விஸ் புக் 'ஓப்பன்' பண்ண சர்க்கார் உத்தரவிடுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் அவர்கள் இது பற்றித் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

கால்நடை மருத்துவ மனைகள்

*458 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவமனைகள் எந்த அடிப்படையில் திறக்கப்படுகின்றன?

(இ) 1963-ல் திறக்கப்படவிருக்கும் மருத்துவமனைகள் எத்தனை ஜில்லாவாரியாக?

THE HON. SRI P. KAKKAN : (a) Veterinary Dispensaries are being opened in Taluk and Block Headquarters. In other places, they are opened depending upon the local demand, cattle population, disease position, availability of land, buildings, staff etc., preference being given to Panchayat Unions which have no dispensary within a radius of 5 miles and where the Unions come forward to donate lands, construct buildings or make any other contribution.

(b) Thirty dispensaries and the district-wise particulars are :—

South Arcot District—4.
North Arcot District—2.
Thanjavur District—1.
Madurai District—4.
Ramanathapuram District—3.
Tirunelveli District—5.
Tiruchirappalli District—3.
Salem District—4.
Coimbatore District—4.

சிமெண்டு ரோடுகள் (இராமநாதபுரம் மாவட்டம்)

*459 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் ரோடுகள் போடப்பட்டுள்ளனவா?

(இ) ஆமென்றால், எத்தனை மைல்கள்?

22nd November 1963]

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) 23 miles 5 furlongs.

ஆசிரியர் குடியிருப்பு

* 460 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) ஆசிரியர்கள், பள்ளிக்கு ஒரு மைல் சுற்றுப்புறத்திற்குள்ளேயே குடியிருக்கவேண்டும் என அரசாங்கம் உத்தரவு இட்டுள்ளதா ?

(இ) இதேபோன்று அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டுள்ளவர்களையும் குடியிருக்க உத்தரவு இடப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், ஆசிரியர்கள் மட்டும் வற்புறுத்தப்படக் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) According to existing rules and instructions teachers are ordinarily expected to reside at the place of duty or within a mile from the school.

(b) Ordinarily all Government servants are also required to reside at the Headquarter stations prescribed for them.

(c) Does not arise.

திரு. முனு ஆதி : ஆசிரியர்கள் கிராமப் புறங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது, அங்கு அவர்களுக்கு வீட்டு வசதி இல்லாமல் இருப்பதன் காரணமாக அங்கேயே போய்க் குடியேற முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, ஆசிரியர்கள் வேலை பார்க்கும் இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள் இருக்கவேண்டுமென்ற விதியைத் தளர்த்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கும் விதிகளைத் தளர்த்துவது முறையல்ல. ஆயினும், ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் சீக்கிரத்தில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட இருக்கிறது.

Illicit cutting of trees

* 461 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the illicit cutting of live trees in Bettamugalalum Bennihalli and Kandenahally unreserved forest in Dharmapuri taluk; and

(b) if so, the action taken to prevent such illicit cutting of trees?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம் ; தெரியும்.

(இ) கள்ளத்தனமாய் மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க கிராம அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு சேலம் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்